# ‘அனைவருக்கும் கண்ணொளி’ (Sight For All) ‘குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கைகள்’ தகவல் ஏடு

SIGHT FOR ALL
TEACHING THE WORLD TO SEE

துஷ்பிரயோகப்படுத்தப்படுவதிலிருந்து காக்கப்படுவதற்கும், பாதுகாப்பாக இருப்பதற்குமான உரிமை குழந்தைகளுக்கு இருக்கிறது. குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான தேவை என்பத அனைத்து சமூகத்தினருக்கும் மிக முக்கியமானதாகும். உலகெங்கும், குழந்தைகள் சுரண்டலுக்கு ஆட்படுத்தப்படுகின்றனர், மற்றும் துஷ்பிரயோகத்திற்கும், பாலியல், உடலியல் மற்றும் உளவியல் ரீதியான வன்முறைக்கும் அவர்கள் ஆட்படுத்தப்படுகின்றனர். வியாபார ரீதியான பாலியல் சுரண்டல் உட்பட, உழைப்பு சுரண்டப்படும் வேலைகளில் பலர் பலவந்தமாக ஈடுபடுத்தப்படுகின்றனர்.

குழந்தைகள் துஷ்ப்பிரயோகமும், குழந்தைகள் சுரண்டலுக்கு ஆளாக்கப்படுவதும் எவ்வொரு தருணத்திலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பது ‘அனைவருக்கும் கண்ணொளி’ (Sight For All) சேவையினது கருத்து. துஷ்ப்பிரயோம் மற்றும் சுரண்டலிலிருந்து காக்கப்பட்டு பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை குழந்தைகளுக்கு இருக்கிறது, மற்றும் குழந்தைத் துஷ்ப்பிரயோகம் மற்றும் குழந்தைகளின் உழைப்பைச் சுரண்டுதல் ஆகிய விடயங்களில் சகிப்புத்தன்மை அறவே இல்லை என்ற அணுகுமுறையை ‘அனைவருக்கும் கண்ணொளி’ (Sight For All) பின்பற்றுகிறது.

குழந்தைகள் உட்பட, தம்முடன் இணைவாய்ப் பணியாற்றும் அனைவரது பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்காக ‘அனைவருக்கும் கண்ணளி’ (Sight For All) அமைப்பு ‘குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை’ (Child Protection Policy) ஒன்றை நடைமுறையில் கொண்டுள்ளது.

‘அனைவருக்கும் கண்ணொளி’ (Sight For All) சேவையின் ‘குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை’ (Child Protection Policy) -யைப் பற்றிய ஒரு மேலோட்டமான பார்வையை இந்தத் தகவல் ஏடு அளிக்கிறது, ஆனால் இந்தக் ‘கொள்கை’யினை இந்த ஏடு இடமாற்றம் செய்யாது.

பின் வருவோர் உள்ளடங்க, ‘அனைவருக்கும் கண்ணொளி’ (Sight For All) அமைப்பில் பணியாற்றும் அனைவருக்கும் இந்த ‘அனைவருக்கும் கண்ணொளி’ (Sight For All) சேவையின் ‘குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை’ (Child Protection Policy) செல்லுபடியாகும்: நிர்வாகக் குழு இயக்குநர்கள், வேலையாட்கள், மருத்துவத் தன்னார்வத் தொண்டர்கள் (Visionaries), மருத்துவப்-பணி சாரா தன்னார்வத் தொண்டர்கள், கண்வைத்திய நாட்டு அலுவலர்கள் (Ophthalmic Country Officers), ‘சகாக்கள்’ (Fellows), திட்டப்-பங்குபற்றுநர்கள், ‘கண் மருத்த்துவப் பிரிவு இயக்குநர்கள், ஒப்பந்ததாரர்கள், நாட்டிற்குள்ளாக இருக்கும் ‘அனைவருக்கும் கண்ணொளி’ திட்டத்துடன் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் ‘அனைவருக்கும் கண்ணொளி’ திட்டத்துடன் முறைப்படியான ஒப்பந்தத் தொடர்பு உள்ள பங்குதாரர்கள்.

### இந்தக் கொள்கைத் திட்டம் ஐந்து கோட்பாடுகளை அடித்தளமாகக் கொண்டுள்ளது:

கோட்பாடு 1: குழந்தை-உழைப்புச் சுரண்டல் மற்றும் குழந்தைத் துஷ்ப்பிரயோகம் குறித்து சகிப்புத்தன்மை அறவே இல்லை

கோட்பாடு 2: குழந்தைகளின் நலன்களுக்கு அதிமுக்கியத்துவம்

கோட்பாடு 3: ஆபத்துக்கூறுகளை மதிப்பிடுதல் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்துதல்

கோட்பாடு 4: குழந்தைகள் பாதுகாப்பு குறித்த பொறுப்புகள்

கோட்பாடு 5: அறிக்கைகள்-சமர்ப்பிப்பு மற்றும் செயல்பாட்டுமுறை நியாயம்

## முக்கியமான சொல்-விளக்கங்கள்

### குழந்தைகள்

'குழந்தைகள் உரிமை குறித்த ஐக்கிய நாடுகள் ஒப்பந்த'(United Nations Convention on the Rights of the Child)த்தின் பிரகாரம் 'குழந்தை' என்பது, குழந்தைகளுக்கான சட்டப்படி 18 வயதிற்கு முன்பாகவே குழந்தை வயதுக்குவந்திருக்காவிட்டால், 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட ஒவ்வொரு மானிட சீவனையும் குறிக்கும்.

### துஷ்ப்பிரயோகம்

உடல்ரீதித் துஷ்ப்பிரயோகம் - குழந்தைக்குத் தீங்கு விளைவிக்கும் வகையிலான உடல்ரீதி பலாத்காரத்தினைக் குழந்தையின் மீது பாவித்தல். தள்ளுதல், அடித்தல், அறைதல், குலுக்குதல், வீசுதல், குத்துதல், உதைத்தல், கடித்தல், சுடுதல், கழுத்தை நெறித்தல் மற்றும் விஷம் வைத்தல் ஆகிய செயல்கள் உடல்ரீதித் துஷ்ப்பிரயோகத்தில் உள்ளடங்கும்.

**புறக்கணிப்பு** - குழந்தைகளின் உடல்ரீதியான, உணர்வுரீதியான வளார்ச்சிக்கும் பொது-நலனுக்கும் அத்தியாவசியமானவை என்று கலாசார முறைப்படி ஏற்றுக்கொள்ளப்படும் சூழ்-நிலகளை ஒரு பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் (அவர்களால் இயலுமான நிலையில் அவர்கள் இருக்கம் பொழுது) கொடுக்கத் தவறுவது.

**உணர்வுரீதித் துஷ்ப்பிரயோகம்** - பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் ஒருவருடைய தகாத வார்த்தைகள் மூலமாக அல்லது சைகைகள் மூலமாக குழந்தையைப் பார்த்து செய்யப்படும் செயல்கள், அல்லது குழந்தை ஒன்றிற்குப் போதுமான உடல்-சாராப் பராமரிப்பு மற்றும் உணர்வுரீதியான ஆதரவு ஆகியவற்றை நீண்டகாலமாக அளிக்கத் தவறும் விதத்திலான பாங்கு. ஒரு குழந்தையின் சுய-மதிப்பு மற்றும் சமூக ஈடுபாட்டு ஆர்வம் ஆகியவற்றை சேதப்படுத்துவதற்கான சாத்தியம் இப்படிப்பட்ட செயல்களுக்கு அதிகம் இருக்கும்.

**பால்ரீதித் துஷ்ப்பிரயோகம்** - வயதுவந்த ஒரு நபர் அல்லது வயதில் மூத்த குழந்தை அல்லது வளர்-இளம் பிராயத்தினர் ஒருவர் பாலியல் திருப்திக்காக ஒரு குழந்தையைப் பாவித்தல். பிறப்பு உறுப்புகளைத் தடவுதல், பாலியல் சுய-இன்பம், வாய் மூலமான பாலுறவு, ஆணுறுப்பு, விரல் அல்லது வேறொரு பொருள் ஒன்றை யோனிக்குள் செருகுதல், மார்பகங்களைத் தடவுதல், மற்றவர்களுடைய பாலியல் நடவடிக்கைகளைப் பார்த்து இன்புறல், திறந்துகாட்டுதல், ஆபாசப் பாலியல் படங்களைக் குழந்தைக்குக் காட்டுதல் அல்லது அவற்றில் குழந்தையை ஈடுபடுத்துதல்.

குழந்தைச் சுரண்டல் மற்றும் குழந்தைத் துஷ்ப்பிரயோகம்: பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை:

- குழந்தை ஒன்றிற்கு எதிரான துஷ்ப்பிரயோகச் செயல் அல்லது செயல்களை இழைப்பதில ஒருவரை ஈடுபடுத்ததல் அல்லது அப்படிப்பட்ட செயல் அல்லது செயல்களைச செய்யுமாறு ஒருவரைக் கட்டாயப்படுத்துதல்.
- குழந்தைச் சுரண்டல் சம்பந்தப்பட்ட விடயங்களை வைத்திருத்தல், அவற்றைக் கட்டுப்படுத்துதல், தயாரித்தல், விநியோகித்தல், பெறுதல் அல்லது பரப்புதல்.
- ஒருவரை பாலியல் செயல் அல்லது செயல்கள் நோக்கத்திற்காக இணையம் மூலமாக ஆயத்தப்படுத்தும் காரியத்தில் ஒருவரை ஈடுபடுத்துதல் அல்லது அப்படிப்பட்ட காரியம் அல்லது காரியங்களைச் செய்யுமாறு ஒருவரைக் கட்டாயப்படுத்துதல்.

### குழந்தைப் பாதுகாப்பு

குறிப்பாகக் குழந்தைச் சுரண்டல் மற்றும் குழந்தைத் துஷ்ப்பிரயோகத்திலிருந்து விளையும் தீங்குகள் எதிலும் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள நடவடிக்கை அல்லது முயற்சித்திட்டம்.

பின் வருவன ‘அனைவருக்கும் கண்ணொளி’ சேவையின் ‘குழந்தைப் பாதுகாப்பு’ கொள்கைத் திட்ட அமலாக்கத்தின் முக்கிய அம்சங்களாகும். கீழே கோடிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ள செயல்பாடுகளின் மூலமாக அனைத்துக் குழந்தைகளையும் பாதுகாப்பாக வைத்திருக்க ‘அனைவருக்கும் கண்ணொளி’ சேவை முயற்சிக்கிறது.

**ஆளெடுப்புச் செயற்பாடுகள்**

வேலை இடங்களை நிரப்புவதற்காக ‘அனைவருக்கும் கண்ணொளி’ சேவையானது மிகவும் பாதுகாப்பான மற்றும் மிகவும் பொருத்தமான ஆட்களைத் தேர்ந்தெடுக்கும், மற்றும் ஏற்றுக்கொள்ளத்தகாத தீங்கினைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்தக்கூடிய நபர் ஒருவரை தெரிந்தே நேரடியாகவோ, மறைமுகமாகவோ வேலைக்கு அமர்த்தாது.

**பயிற்சி**

‘அனைவருக்கும் கண்ணொளி’ சேவையின் நிர்வாகக் குழு இயக்குநர்கள், வேலையாட்கள், ‘தொலைநோக்கர்கள்’ (Visionaries), தன்னார்வத் தொண்டர்கள், கண்வைத்திய நாட்டு அலுவலர்கள் (Ophthalmic Country Officers), ‘சகாக்கள்’ (Fellows), திட்டப்-பங்குபற்றுநர்கள், ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆகிய அனைவரும் ‘குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் பாதிப்புறும் நிலையிலுள்ளவர் குறித்த நடத்தை கோட்பாடு’ எனும் ஆவணத்தின் பிரதி ஒன்றைப் பெறுவார்கள் மற்றும், அதை அவர்கள் விளங்கிக்கொண்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொண்டு அதில் கையொப்பம் இடுவார்கள்.

‘நலம் பயக்கும் குழந்தை வளர்ப்புச் செயல்பாட்டு பணிமனைகள்’ நடாத்தப்படும், மற்றும் குழந்தைப் பாதுகாப்பைப் பற்றிய விலாவரியான பகுதி ஒன்று இதில் உள்ளடங்கியிருக்கும்.

**பங்குதாரர்கள்**

‘அனைவருக்கும் கண்ணொளி’ -யில் பங்குபற்றும் அனைத்து அரசு-சாரப் பங்காளர்களும் குழந்தைப் பாதுகாப்பு குறித்த அவர்களுடைய சொந்தக் கொள்கைகளைப் பின்பற்றிப் பராமரிக்கவேண்டும்.

பங்குதாரர் ஒப்பந்தங்களில் குழந்தைப் பாதுகாப்பு குறித்த அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளின் தர நிலைகளும் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அரச பங்காளர்களும், ‘அனைவருக்கும் கண்ணொளி’-யினரும் இணைவாய்ச் செயலாற்றுவர். கணிசமான ஆபத்துகளைக் குழந்தைகள் எதிர்கொள்கின்றனர் என்று ‘அனைவருக்கும் கண்ணொளி’ -யை நம்ப வைக்கும் செயல்களின் காரணமாக, குறிப்பிட்ட அந்த பங்காளர் அமைப்புடனான ஒப்பந்தம் முறிக்கப்படும்.

**ஆபத்துக்கூறுகள் கட்டுப்பாடு**

துவக்க-நிலை மற்றும் கருத்துரு-நிலைகளின் ஒரு பகுதியாக ‘திட்ட ஆபத்துக்கூறு மதிப்பீடுகள்’ மேற்கொள்ளப்படுகின்றன, மற்றும் இந்தத் திட்ட காலம் நெடுக இவை மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றன. ‘திட்ட ஆபத்துக்கூறு மதிப்பீடுக’ளில் குழந்தைப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் உள்ள ஆபத்துக்கூறுகளும், ஏற்படவல்ல ஆபத்துகளை மட்டுப்படுத்துவதற்கான அல்லது அகற்றுவதற்கான செயற்பாடுகளும், சிபாரிசுகளும் உள்ளடக்கப்படுகின்றன.

‘அனைவருக்கும் கண்ணொளி’-யின் நிர்வாக இயக்குநர்கள் குழந்தைப் பாதுகாப்பு ஆபத்துக்கூறுகளின் கண்காணிப்பினை ஒரு அமைப்பு மட்டத்தில் மேற்கொள்வார்கள்.

## குழந்தைகளைப் படம் பிடித்தல்

புகைப்படங்களை எடுக்கும் பொழுது தனி-நபர் கௌரவம் மதிக்கப்படுவது, படம் எடுக்கப்படுபவர்களின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் பொது-நலன் என்பன உறுதிப்படுத்தப்படுவது ஆகியவற்றின் முக்கியத்துவத்தினை ‘அனைவருக்கும் கண்ணொளி’-யின் பிரதிநிதிகள் அவசியம் தெரிந்துகொண்டிருக்க வேண்டும், மற்றும் அவற்றை விளங்கிக்கொண்டிருக்க வேண்டும். படம் எடுக்கப்படும் சூழ்நிலைகள் மற்றும் அவற்றின் உண்மைகள் ஆகியவற்றை எடுக்கப்படும் படங்கள் உண்மையாகப்

பிரதிபலிக்கவேண்டும், மற்றும் படம் எடுக்கப்படும் நபர், சூழ்நிலை, இடம் அல்லது சூழல் ஆகியவற்றைப் படங்கள் தவறாகப் பிரதிபலிக்கக்கூடாது. எடுக்கப்படும் படங்கள் அனைத்திற்கும் அறிவார்ந்த சம்மதம் கட்டாயமாக அளிக்கப்படவேண்டும், அத்துடன் சம்மதத்தின் ஆதாரச் சான்று 'அனைவருக்கும் கண்ணொளி'-யின் தலைமை அலுவலகத்தினால் வேண்டப்படும்.

## புகார் செய்தல்

கரிசனங்கள், சந்தேகங்கள், குழந்தைத் துஷ்ப்பிரயோகம் மற்றும் குழந்தைச் சுரண்டல் குறித்த குற்றச்சாட்டுகள், இந்தக் கொள்கைகள் அல்லது 'அனைவருக்கும் கண்ணொளி'-யின் நடத்தைக் கோட்பாட்டுக் கொள்கைகளின் மீறல் ஆகிய அனைத்தும் உடனடியாகப் புகார்ப்படுத்தப்படவேண்டும். அனைத்துப் புகார்களையும் 'அனைவருக்கும் கண்ணொளி' ஏற்றுக்கொள்ளும், அத்துடன் எழுப்பப்படும் கரிசனங்களைப் பாரதூரமானதாக எடுத்துக்கொண்டு அவற்றின் மீது உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். கரிசனங்கள், குழந்தைத் துஷ்ப்பிரயோகம் அல்லது குழந்தைச் சுரண்டல் குறித்த குற்றச்சாட்டுகள் ஆகியவற்றின் விசாரிப்பில் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்தப்படுவதையும், நியாயமான நீதி குறித்த கோட்பாடுகளின் மேன்மையையும் 'அனைவருக்கும் கண்ணொளி' உறுதிப்படுத்தும்.

சந்தேகிக்கப்படும், அல்லது உண்மையில் நடந்தேறிய குழந்தைத் துஷ்ப்பிரயோகம் அல்லது குழந்தைச் சுரண்டலைப் பற்றிய புகார் ஒன்றை யாரொருவரும் ஏற்படுத்தலாம்.

'அனைவருக்கும் கண்ணொளி' -யின் 'குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகள்' அல்லது 'பாதிப்படையவல்ல நபர் குறித்த நடத்தைக் கோட்பாடு' ஆகியன மீறப்படுகின்றன என்ற கரிசனத்தை ஏற்படுத்தும் விதத்திலான நடத்தை எதுவும் அவதானிக்கப்பட்டால், அது புகார்ப்படுத்தப்படவேண்டும். குழந்தை ஆபாசப்படங்கள் அல்லது குழந்தைச் சுரண்டலைப் பற்றிய விடயங்கள் குறித்த சந்தேகம், அவற்றை வைத்திருப்பது அல்லது அவற்றை அணுகிப் பெறுவது குறித்த குற்றச்சாட்டு, குழந்தைகளைத் தகாத வகையில் படம் எடுப்பதன் அவதானிப்பு, 'அனைவருக்கும் கண்ணொளி' -யில் உள்ள ஈடுபாட்டின் காரணமாகக் குழந்தைகளுக்கு ஏற்படும் ஆபத்து அல்லது தீங்கு ஆகியன எதுவும் புகார்ப்படுத்தப்படவேண்டும்.

24 மணி நேரத்திற்குள்ளாகப் புகார் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவேண்டும்.

### நான் நேரில் பார்த்திருக்கும் விடயம் குழதைச் சுரண்டல் மற்றும் துஷ்ப்பிரயோகமா என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால் நான் என்ன செய்வது?

குழந்தைச் சுரண்டல் மற்றும் குழந்தைத் துஷ்ப்பிரயோகச் செயல்களாகவும், கொள்கைகளை மீறும் செயல்களாகவும் அமைவது எவை என்பதைப் பற்றிய இரகசிய அறிவுரை மற்றும் மேலதிகத் தகவல்களுக்கு 'குழந்தைப் பாதுகாப்பு முன்-நிலை நபர்' அல்லது 'அனைவருக்கும் கண்ணொளி'-யின் நாட்டு அதிகாரி அவர்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.

### அறிக்கை ஒன்றை நான் எப்படி சமர்ப்பிப்பது?

பின் வரும் வழிகளில் புகார்கள் சமர்ப்பிக்கப்படலாம்: https://sightforall.org/complaints/ எனும் வலைத்தலப் பக்கம் மூலமாகப் புகார் செய்யலாம் அல்லது கீழே பட்டியலிடப்பட்டுள்ள 'அனைவருக்கும் கண்ணொளி'-யின் பிரதிநிதிகளில் ஒருவருடன் தொடர்புகொள்ளலாம்:

'அனைவருக்கும் கண்ணொளி'-யின் செயலாக்க அதிகாரி - jhatswell@sightforall.org
மங்கோலியா/ஸ்ரீ லங்கா/ம்யான்மார் நாட்டு அதிகாரி - myanmarcountryofficer@sightforall.org
கம்போடியா நாட்டு அதிகாரி - cambodiacountryofficer@sightforall.org
ஸ்ரீ லங்கா நாட்டு அதிகாரி - srilankacountryofficer@sightforall.org